எரியும் நெருப்பில் உயிர் விட்டு தமிழ் ஈழம் காத்தவன் கிட்டு 2

கோழை என வாழ்ந்த தமிழர் நெஞ்சத்தில் கனலை மூட்டியவன் 2
காலை இழந்த பின்பும் களத்தில் வீரனாய் நடந்து காட்டியவன் 2

எரியும் நெருப்பில் உயிர் விட்டு தமிழ் ஈழம் காத்தவன் கிட்டு 2

அலையின் மூச்சுக்கும் புயலின் வீச்சுக்கும் அசையாப் படகோட்டி 2
தலைவன் வழிகாட்டும் திசையில் நடந்தவன் அவனே வழிகாட்டி 2

எரியும் நெருப்பில் உயிர் விட்டு தமிழ் ஈழம் காத்தவன் கிட்டு 2

பொங்கு களமாடி மண்ணில் நாட்டினான் தமிழர் போர் திறத்தை 2
எங்கள் யாழ் மண்ணை மீட்ட முதல் வீரன் அவன் தான் தமிழ் சிறுத்தை 2

எரியும் நெருப்பில் உயிர் விட்டு தமிழ் ஈழம் காத்தவன் கிட்டு 2

கொலைஞர் கூட்டத்தை கிட்டு மாவீரன் வாழ்கை எச்சரிக்கும் 2
உலகம் உள்ளவரை தமிழ் மண் புலி வீரன் பெயரை உச்சரிக்கும் 2

எரியும் நெருப்பில் உயிர் விட்டு தமிழ் ஈழம் காத்தவன் கிட்டு 2